Reg'stered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன 444 தந்தி 'இரத்தினம்ஸ்'
50.கன்னாதிட்டி.யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

டன்லப் குட்இயர்
டயர்கள் ரூ. ச.
5-25-16 — 186-75
5-90 14 — 189-00
ரிஜிஸ்டேசன் புஸ்தகமும் 1971-ம் ஆண்டு டெக்ஸும் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்வீதி, வல்வெட்டித்துறை.
போன்: 34

மலர் 13 ஆனி 18 ஐ:அவ் 8 (2—7—71) வெள்ளிக்கிழமை இதழ் 140

# இன்று முதல் வழமைபோல் ரயில் - பஸ் சேவைகள்!

## குடாநாடு முழுவதும் இரவு 10-30 மணிவரை பஸ் ஓடும்

### இரவு தபால் ரயில் இன்று புறப்படும்

— எஸ். கே. காசிலிங்கம் —

யாழ்ப்பாணம்,வெள்ளி

**இன்று முதல் யாழ்ப்பாணத்திலிருந்து ரயில், பஸ் போக்குவரத்துச் சேவைகள் ஏப்ரில் மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் இருந்தது போல் நடைபெறும்.**

யாழ்ப்பாணம்பஸ்நிலையத்திலிருந்து குடா நாட்டின் சகல பாகங்களுக்கும் இரவு 10 30 மணிவரை இ போ ச பஸ்கள் சேவையில் ஈடுபடும். பருத்தித்துறைக்கு மட்டும் இரவு 10 மணிக்குப்பின்னர் பஸ்சேவை நடைபெறாது மறு அறிவித்தல்வரை 10 மணிவரை மட்டுமே பருத்தித்துறை பஸ் சேவை நடைபெறும் என்று இ போ ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**ரயில் சேவை**

காங்கேசன்துறை- கொழும்பு இரவு தபால் ரயில் வண்டி இன்று முதல்வழமைபோல் சேவையில் ஈடுபடும் இரவு 7 மணிக்கு இந்த ரயில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் ஏப்ரல் 5ந் திகதிக்கு முற்பட்ட காலத்தில் பிற்பகல் 2-30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட ரயில் வண்டி. இன்று முதல் பிற்பகல் 1-40 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6-40 மணிக்கும் ரயில்சேவை வழமைபோல் நடைபெறும்

கொழும்பிலிருந்து ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லாத நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இரவு ரயில் வண்டி சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கொழும்பு மட்டக்களப்பு- திருகோணமலை ரயில்சேவையும் ஏப்ரல் 5ம் திகதிக்கு முன்னர் இருந்தது போல நடைபெறும்.

3-ம் திகதி காலை 5-45 மணிக்கு கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு ரயில் வண்டி புறப்படுவதுடன் வழமையான சேவை ஆரம்பமாகிறது.

## துரையப்பா பிறந்ததினம்

### அமைச்சர்கள் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் மேயர் திரு அல்பிரட் துரையப்பாவின் 45-வது பிறந்ததினவிழா இம்மாதம் 15ம்திகதி யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

இவ்விழாவில் தபால் அமைச்சர் திரு எஸ் குமாரசூரியர், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு கே வி ரத்னாயக்கா, வர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்தின ஆகியோர் கலந்துகொள்வார்களாம்.

உதவிஅமைச்சரும் மூதூர் எம் பியுமான ஜனாப் மஜீத், மட்டக்களப்பு இரண்டாவது எம் பி திரு ராஜன் செல்வநாயகம் உட்பட தென்னிலங்கையைச் சேர்ந்த 10 எம் பிக்களும் கலந்துகொள்வார்கள் என்றும்

இவ்விழாவுக்கானஏற்பாடுகளைச் செய்வதற்கு முதலியார் திரு செ. முத்துத்தம்பியைத் தலைவராகவும். வித்துவான் க. ந. வேலனைச் செயலாளராகவும்கொண்ட கமிட்டி ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்கமிட்டியில் சகல கட்சிகளையும்சேர்ந்த 15 பேர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அன்று காலை யாழ் நகரில் உள்ள சகல மதஆலயங்களிலும் விசேஷ ஆராதனைகள் நடைபெறும் காலைமாணவ மாணவிகளின் விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறும். நண்பகல் முனியப்பர் கோவிலில் விசேஷ பூசையைத் தொடர்ந்து ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்படும் இரவு திறந்தவெளியரங்கில் கலாச்சார விழாவும் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும். 'அடங்காப் பிடாரி' நாடகம் இறுதி நிகழ்ச்சியாக நடைபெறும்.

பிறந்ததின விழாவை யொட்டி அன்று மலர் ஒன்றும் வெளியிடப்படுமாம்.

## வழமைபோல் சமயவிழாக்கள்

கோட்டை,வியாழன் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வரும் முக்கியமான சமயவிழாக்கள் வழமைபோல் எவ்வித தடங்கலுமின்றி நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்தது கதிர்காம உற்சவம் ஜூலை 23-ம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் 7-ம் திகதிவரை நடைபெறும் வேல் விழாவும் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது நல்லூர் உற்சவம், நயினாதீவு உற்சவம் ஆகியனவும் வழமைபோல் நடைபெறும்.

## பிரதமரின் அனுதாபச் செய்தி

கோட்டை, வியாழன் "விண்வெளிவீரர்களின் மரணத்தை நாம் அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். அவர்கள் ஆற்றிய அரும் பெரும் சேவைக்கு தலை வணங்குகின்றோம். வீரர்கள் மரணம் குறித்து துக்கம் அடைந்திருக்கும் சோவியத் மக்களுடன் சேர்ந்து நாமும் துக்கம் அனுபவிக்கிறோம். இலங்கை அரசினதும் மக்களதும், எனதும் ஆழ்ந்த அனுதாபத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்."

சோவியத் மூன்று விண்வெளி வீரர்களின் மறைவு குறித்து இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சோவியத் யூனியனுக்கு அனுப்பிய அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்

## விண்வெளிவீரர்களின் இறுதிச் சடங்குகள் இன்று

### இறப்புக்குரியகாரணம்பற்றிமௌனம்

மாஸ்கோ, ஜூலை 1 சோவியத் விண்வெளி வீரர்களின் பிரேத பரிசோதனைகள் முடிவடைந்து விட்டன ஆயினும் மரணத்தின் காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை மாஸ்கோ அதிகாரிகள் இது சம்பந்தமாக இன்னமும் மௌனம் சாதிக்கிறார்கள் என்றுடாஸ் செய்திஸ்தாபனம் தெரிவித்தது

**கடைசி வரை உயிர் வாழ்ந்தனர்**

பொதுமக்கள் அஞ்சலிக்கென வீரர்களின் சடலங்கள்இப்போது எட்டடி உயரமான மேடையில் வைக்கப்பட்டுள்ளது. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் மரியாதையை செலுத்திவருகின்றனர். சோவியத் அதிபர் பெட்கோர்ணி பிரதம மந்திரி கொஸிஜின் பிரஸ்னேவ் ஆகியோர் இறந்த வீரர்களுக்கு அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினர். இறுதிச்சடங்குகள் இன்று 2-ம் திகதி இராணுவ மரியாதையுடன் நடைபெறவிருக்கிறது

முன்னர் மரணமடைந்த விண்வெளிவீரர்களின் அஸ்தி வைக்கப்பட்டிருக்கும் செஞ்சதுக்கத்தில் இவர்களின் அஸ்தி வைக்கப்படும்.

பூமிக்குத்திரும்பும் வழியில் கடைசிநேரம்வரை 3 வீரர்களும் உயிருடன் இருந்துள்ளனர் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சே-யூஸ்11 பெட்டகம் அடர்த்தியானகாற்று மண்டலத்துள் புகுந்த பின்னரே இறப்பு நிகழ்ந்துள்ளதாம். அந்த நாட்கள் விண்வெளியில் தங்கிவிட்டு புவிஈர்ப்புச் சக்திக்குள் நுழையும் போது தாக்குப்பிடிக்க முடியாததினால் இறப்பு நேர்ந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

யாழ். பஸ்நிலையத்தில்

## அனாதரவாகக்கிடந்த குழந்தை ஆஸ்பத்திரியில்

குருநகர், வியாழன் நேற்று மாலை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அனாதரவாகக் கிடந்த 5 ருத்தல் நிறையுள்ள ஒரு வார பெண் குழந்தை யொன்று பஸ்நிலையப் பொறுப்பாளர்களால் கண்டெடுக்கப்பட்டு பொலிசாரின் விசாரணைமுடிவில்யாழ் பெரியாஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரியிலிருந்து ரிக்கற் வெட்டி வெளியேறிய ஒரு பெண் பஸ் நிலையத்தில் இப்பிள்ளையை விட்டு விட்டு மறைந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது இக்குழந்தைக்கு அருகில் கிடந்த பை ஒன்றில் இரண்டு றவுக்கையும் ஒரு கவுணும் ஆஸ்பத்திரியில் பாவிக்கப்படும் பேணி கரண்டி, பற்பொடி ஆகியனவும் காணப்பட்டன.

பொலிசாரின் விசாரணையின்பின்னர் குழந்தை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## விடுதலை பெற்றவர்களுக்கு மீண்டும் வேலை

கோட்டை, வியாழன் அவசரகால நிலைமை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தால் அவர்கள் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவார்களென்றும் அவர்களுக்கு முழு வேதனம் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கக்கூடிய 2 இலக்ரிக் வாட்டர் பம் (Electric Water Pump 2" Suction detivery) இங்கிலாந்திலிருந்து புதிதாக வரவழைக்கப்பட்டுள்ளது. விலை விபரங்கட்கு நேரில் பார்வையிடவும்: K.S. பாலசிங்கம், கொழும்புத்துறை தபால்கந்தோருக்கு முன்பாக, 90 கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம். 3237

சொந்தப் பாவிப்பில் உள்ள ருன்சிஸ்டர்ரேடியோ புதிய றலி சயிக்கிள், சிங்கர் மெசின் ஆகியன விற்பனைக்குண்டு. விபரங்கட்கு வே. அப்பையா, இல 9. மானிப்பாய் வீதி, ஒட்டுமடம். 3304

## 'பிறவிக்கவிஞர் புலவர் சின்னையா'

யாழ்ப்பாணம், வெள்ளி

"கச்சாயூர்ப் புலவர் சின்னையா ஒரு பிறவிக் கவிஞர். அவரால் கச்சாயூர் பெருமை பெற்றது. அன்னார் இயற்றிய நூல்களுள் கதிரைமலைக்கோவை குறிப்பிடத்தக்கது. அவர் வாழும் போதே சாகித்திய மண்டலம் அவருக்குப் பரிசளித்துக் கௌரவித்தது மகிழ்ச்சிக்குரியது."

கொடிகாமம் இராமநாதன் கழக கமிட்டிக் கூட்டத்தில் கழகத்தலைவர் திரு எஸ். எம். கமலநாதன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மடாலயத்தில் நேற்று நடந்த இக் கூட்டத்தில் புலவர் சின்னையா மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது.

## விளம்பரம்

### கைதடி கிராமசபை

கீழ் காணும் வேலைகளுக்கு 1971ம் ஆண்டு ஆடி மாதம் 10-ம் திகதி பகல் 12-00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 8-ம் திகதி பகல் 12-00 மணி வரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்களை கிராமசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### வேலையின் விபரம்

1. இத்தனை கனாவடி மணியகாரன் வடக்கு வீதி அமைத்தல்.
2. ஐயினைப்பிட்டி சுடலைக் கிணறு கட்டுதல்.

இ. செல்லையா,
தலைவர்,
கிராமசபை அலுவலகம்,
கைதடி,
28-6-71. 2881

### கரைச்சி கிராமசபை தீர்மானம்

கண்டாவளை, வியாழன்

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பயங்கரவாதத்தை அடக்கி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக பிரதம மந்திரிக்கும் உணவு, எரிபொருள் விநியோகம் ஆகிய அத்தியாவசிய சேவையை மிகவும் திறமையாக வடமாகாணத்திற்கு செய்து உதவியதற்காக வடமாகாண அரசாங்க அதிபருக்கு நன்றி தெரிவித்தும் கரைச்சிக் கிராமசபை அதன் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது. பாதுகாப்புப் படை வீரர்களின் நிதிக்காக ரூபா 50 அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 2—7—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 இஸ்லாமிய நற்சிந்தனை 6-20 தமிழ்ப்பாடல்கள், 7-00 வண்ணத்தமிழ், 7-30 திரைகானம், 7-45 பயனுள் குரான், 8-00 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்கண்டுபிடிப்புகள், 5-45 மலிச்சேவை.

இரவு 6-10 இடைவேளை இசை 6-15மெல்லிசை, 6-30 பூஜையும் பஜனையும், 7 15 புல்லாங்குழல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

---

### வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை திட்டம்

மாவிட்டபுரம் வியாழன்

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளராகத் தராதரப்பத்திரம் பெற்று வேலையற்று இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஒரு விசேஷ பயிற்சியை ஜூலை முதல் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை ஆரம்பித்து நடத்தவிருக்கிறது.

கூட்டுறவுக் கல்லூரியில் உயர்பிரிவு கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் பெற்றவர்களும் சாதாரண பிரிவு கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் 1-ம் 2-ம் பிரிவில் சித்தியடைந்தவர்களும் மட்டுமே இவ் விசேஷ பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் முடிவு திகதி சென்ற 27-ம் திகதியுடன் முடிவடைந்தது.

இருமாதங்கள் அளிக்கப்படும் இவ்விசேஷ பயிற்சியில் ஒருமாதம் கூட்டுறவுச் சங்கங்களில் சாதனை பயிற்சியும் அளிக்கப்படும்.

இவ்விசேட பயிற்சி முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வெற்றிடம் ஏற்படும் போது சந்தர்ப்பமளிக்கச் சிபாரிசு செய்யப்படும்.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 18-ந் திகதி (2-7-71)

மேஷம்: அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

ரிஷபம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். ஒவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும்.

மிதுனம்: செத்தவும் பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டு.

கடகம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கைவிரிக்கக்கூடும்.

சிம்மம்: சமயோசித புத்தி உங்களுக்கு சிந்தனைகளைத் தேடித்தரும். மக்கள்மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும்.

கன்னி: இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம். உரிமைகளைப் பெறுவதில் புதிய பாதை தென்படும், புண்ணிய விருப்புக்கும் இடமுண்டு.

துலாம்: எதிலும் அலட்சியமனப்பான்மை தோன்றக்கூடும். சகோதரவழியில் சஞ்சலத்திற்கு இடமுண்டு. மௌனம் உண்டு.

விருச்சிகம்: வீணைபொருள் விருத்தியுடன் விருந்திற்கும் இடமுண்டு. தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும்.

தனுசு: உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு.

மகரம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். எடுத்த காரியம் இறுதி நிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும். திடசித்தம் வேண்டும்.

கும்பம்: இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்துதொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியும் செல்வாக்கும் பெருகும்.

மீனம்: தொல்லைகள் அலைமோதும். மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள். குடும்பத்திலும் சிறுபிணிக்கு இடமேற்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## யாழ் ஆசிரியருக்கு இந்திரா கடிதம்

உடுவில் வியாழன்

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தம் கைப்பட எழுதிக் கைச்சாத்திட்டுள்ள கடிதம் ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுவில் கிளைத் தலைவர் பெற்றுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுவில் கிளைத் தலைவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியருமான திரு. ஆறுமுகம் கல்யாணசுந்தரேசன் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு அனுப்பிய ஒரு வாழ்த்துச்செய்திக்கு நன்றி தெரிவித்து திருமதி இந்திரா கடிதம் எழுதியுள்ளார்.

'உங்கள்வாழ்த்துச்செய்திக்கு என் மனமார்ந்தநன்றி எம்மக்கள் என்மீது கொண்டுள்ள பெரும் நம்பிக்கையின் நிமித்தம் என்மீது சுமத்தியுள்ள பெரும் பொறுப்பை மனத்துணிவுடன் ஏற்றுள்ளேன். மக்களின் பேராதரவு எனக்கு இருக்கும் வரை என்மீது சுமத்தப்பட்ட பொறுப்பைத் திறம்பட நிர்வகிக்க முடியும் எனக் கருதுகிறேன்' என்று அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

ஊரதீவு, வியாழன்

புங்குடுதீவு இந்து இளைஞர் சங்கத்தினர் வெள்ளிக்கிழமை தேவாரம், தேவாரப்பண்ணிசை வகுப்புகளை புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடத்திவருகின்றனர்.




ராணி (யாழ்ப்பாணம்)
பி.ப. 2-30 இரவு 6-30, 10-00
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 இரவு 6-30, 9-45
முத்துராமன் சுந்தரராஜன்
நாகேஷ் — ராஜஸ்ரீ லக்ஷ்மி
நடித்த
3வது வாரம்
நவக்கிரகம்

வெலிங்டன் யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, இரவு 6-30, 10-00
★ சிவாஜி கணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

யாழ். நகரில்
'லிடோ'
தியேட்டர் திறப்புவிழா
5-7-71 திங்கட்கிழமை
★ சிவாஜி ★ சாவித்திரி
நடித்த
சரஸ்வதி சபதம்

ஸ்ரீ காலிங்கன்
தெல்லிப்பழை
தினசரி பி.ப 6 00, 9-00
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா?

நாகமஸ்சினிமா
சுன்னாகம்
இன்றுமட்டும்
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் — ஜானகி
நடித்த
யார் நீ?

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
பி ப 2-30, 6-00 10-00
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
கண்ணன் என் காதலன்

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி காலை 10 30,
பி. ப. 2 30,
இரவு 6-30, 10-00
ஜெய்சங்கர் — லக்ஷ்மி
(இருவேடங்களில்)
நாகேஷ், விஜயகுமாரி
சுந்தரராஜன்
நடித்த
மகனே நீ வாழ்க

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி 2-00 இரவு 9-45 க்கும் மட்டும்
சிவாஜி - சரோஜாதேவி - ரங்காராவ்
நடித்த
விடிவெள்ளி
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
நீடிக்கப்பட்டுள்ளது
Daily at 5-15, 7-15 p. m
Burt Lancaster
in
SCALP HUNTERS
(Color)

யாழ். வின்ஸர் வெண்திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டமையால்
பழைய நேரத்திற்கு காட்சிகள் காண்பிக்கப்படும்.
★ ஜெமினி கணேசன் ★ விஜயகுமாரி
நாகேஷ் - ராமபிரபா - ராஜ்ஸ்ரீ - அசோகன்
நடித்த
மனைவி

# விண்வெளி வீரர் மரணம் பற்றி ஆராய சோவியத் அரசு ஏற்பாடு

## மூவருக்கும் மிகஉயர்ந்த கிரெம்ளின் விருதுகள்

மாஸ்கோ, ஜூலை 1
சோயுஸ்-11 கலத்தில் விண்வெளியிலிருந்து பூமிக்குத் திரும்புகையில் மரணமான மூன்று வீரர்களின் மரணம் பற்றிய மர்மம் பற்றி விசாரித்தறிய சோவியத் அரசாங்கம் விசாரணைக் குழுவொன்றை நியமித்திருக்கின்றது.

உலகின் முதலாவது விண்வெளி ஆய்வு கூடமான சல்யூட்-1-ல் 24 நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சிகள் பல நடத்திய பின் பூமிக்குத் திரும்புகையில் இத் துக்ககரமான சம்பவம் நடைபெற்றது. இவர்களது மரணத்துக்கான காரணம் எதுவும் திட்டமாகத் தெரியவில்லை. இதற்கான காரணத்தை ஆராய்வதற்காக உத்தியோக பூர்வமாக விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சோவியத் விண்வெளி வீரர்களின் மரணத்திற்கு பிராணவாயு போதியளவு கிடைக்காமை, அல்லது சூழல் மாற்றத்தினால் மாரியில் ஏற்பட்ட வலி காரணமாக இம்மரணம் சம்பவித்திருக்கலாமென மேற்கத்திய விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்கிடையில் இறந்த மூன்று விண்வெளி வீரர்களுக்கும் சோவியத் யூனியனின் உயர்ந்த விருதான 'சோவியத்தின் வீரர்' என்ற விருதளிக்கப்பட்டு அவர்களுக்குக் கௌரவம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

இறந்த ஒருவருக்கு 2 வருடங்களுக்குமுன் இதே விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ் வீரர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் மூவரின் உடலும் கிரெம்ளினிலுள்ள செஞ்சதுக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன.

### யுதாண்ட் வருத்தம்

மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக தம் முயிரை நீத்த இம்மாபெரும் வீரர்களின் மரணம் குறித்து தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்ட ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் மனித சமுதாயத்தின் தூதுவர்கள் இவர்கள் என்று வர்ணித்துள்ளார்.

### நற்கருணைச் சுற்றுலா

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாண கத்தோலிக்கரால் நடாத்தப்பட்ட திவ்விய நற்கருணை சுற்றுலா நேற்று முன்தினம் 4-30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணியளவில் முடிவுற்றது. அர்ச் சஞ்சுவாங் கோவிலிலிருந்து ஆரம்பமாகிய இச் சுற்றுலா யாழ் அடைக்கலமாதா கோவில் சந்தியோகு மையோர் கோவில் வழியாகச் கொஞ்சேஞ்சிமாதா கோவில் திறந்தவெளியை அடைந்தது. வண சவரிமுத்து அடிகளாரின் சொற்பொழிவுடனும் யாழ்ப்பாண மேற்றிராணியார் வண எமிலியானுஸ் பிள்ளையினால் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்துடனும் சுற்றுலா முடிவுற்றது. கொஞ்சேஞ்சிமாதா கோவில் பாடகர் குழுவினரால் ஆராதனைப் பாடல்கள் பாடப்பட்டன.

......

### மின்சாரம் வழங்க நடவடிக்கை

சுழிபுரம் வியா
தொல்புரம் மூளாய் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதில் மின்சார இலாகாவினர் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரண்டு தினங்களாக சுன்னாகம் மின்சாரப் பகுதி பொறியியலாளர்கள் சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு சுந்தரசுவாமியுடன் இடங்களைப் பார்வையிட்டு விபரம் சேகரித்தனர்.

———

### பிரதமருக்குப் பாராட்டு

வவுனியா, வியா
பயங்கரவாதிகளின் நாசகார செயலை வன்மையாக எதிர்த்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றியமைக்கு இலங்கைப் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை பாராட்டி வவுனியாத்தொகுதி தமிழ்த் தாய் மன்றம் அவருக்குச் செய்தி அனுப்பிஉள்ளது.

### மேயரின் தங்கப் பதக்கம் யாருக்கு?

குருநகர், வியா
நல்லூர் திருவிழாவை முன்னிட்டு சமயப் போட்டியொன்றை நடாத்துவதற்கு யாழ். நகர முதல்வர் ஏ. ரி துரையப்பா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இப் போட்டியில் முதல் பரிசு பெறுபவருக்கு மேயரின் தங்கப் பதக்கமொன்று பரிசாக வழங்கப்படவிருக்கிறது. 1958-ல் திரு துரையப்பா மேயராக இருந்த போதும் இவ்வித சமயப் போட்டி நடத்தப்பட்டது.

......

### தலைவராகத் தெரிவு

ஊரதீவு, வியா
கூட்டுறவு இயக்கம் தொடர்பான அரசினரின் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் புங்குடுதீவு நயினாதீவு நெடுந்தீவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீவுப்பகுதியின் அமைப்பாளரும் வழக்கறிஞருமான திரு ப கதிரவேலு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

புதியவிதியின்படி நிர்வாக சபையில் ஐந்து அரசாங்க உத்தியோகத்தர்களும் அமைச்சரால் நியமனம் செய்யப்படும் நால்வரும் இடம்பெறுவர். திரு ப கதிரவேலுவும் கூட்டுறவுத்துறை அமைச்சரால் நியமனம் செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

......

### மாதகலுக்கு புதிய சந்தை

சுழிபுரம் வியா
மாதகல்— பண்டத்தரிப்பு ரோட்டுக்கு அண்மையில் மாதகல் கிராமத்துக்கான புதிய சந்தை அமைக்கப்படஉள்ளது. இதற்கான நடவடிக்கைகளை பண்டத்தரிப்பு கிராமசபையினர் மேற்கொண்டுவருகிறார்கள்.

......

### செல்வச்சந்நிதி பொங்கல் விழா

வல்வெட்டித்துறை, வியா
தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் வருடாந்தப் பொங்கல் விழா இம்மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை இரவு நடைபெறும்.

### அனுரா நாடுதிரும்பினார்

கோட்டை, வியா
பிரதமரின் புதல்வரான திரு. அனுரா பண்டாரநாயக்கா நேற்று விமான மார்க்கமாக நாடு திரும்பினார். பாரிஸ்டர் பட்டத்துக்காக லண்டனில் பயின்று கொண்டிருக்கும் திரு. அனுரா லீவுநாட்களைக் கழிக்க இங்கு வந்துள்ளார்.

......

### பதவி உயர்வுடன் இடமாற்றம்

குருநகர், வியா
யாழ்ப்பாணம் தபால்தந்தி அத்தியட்சகர் அலுவலகத்தில் பிரதம லிகிதராக கடமையாற்றி வந்த ரி. லோகநாதன் கொழும்பு பிரதம தபால்தந்தி அதிபர் அலுவலகத்திற்கு விசாரணை அதிகாரியாக பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் செல்கின்றார்.

......

### சிறப்பாகக் கொண்டாடினர்

தாவடி வியா
கொக்குவில் இந்துக்கல்லூரியில் மணிவாசகர் விழா கொண்டாடப்பட்டது. பண்டிதர் திரு இரா சிவசுப்பிரமணியத்தின் சொற்பொழிவு இசைவாணி திருமதி சரஸ்வதி பாக்கியராசா தேவார ஆசிரியர் திரு எஸ். இராசையா ஆகியோரதும் மாணவ மாணவிகளினதும் தேவாரபாராயணம்முதலிய நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெற்றன.

......

### இருநாள்சம்பளம் உதவி

பருத்தித் துறை, வியா
பயங்கரவாதிகளின் புனர்வாழ்வுத் திட்டத்திற்காக இப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள் நிதி உதவியுள்ளனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் சிலர் தமது இருநாள் சம்பளத்தைக் கழிக்குமாறு வடமாநிலக் கல்வி அதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

......

### வேலணை கி. அ. ச. நடவடிக்கை

ஊரதீவு, வியாழன்
உணவு உற்பத்தியை அதிகரிக்கும் சிறிய திட்டத்திற்கு உதவுமுகமாக வேலணை கிழக்கு நலங்கைக் குளம், வேலணை மேற்கு வேளுக்குளம், சரவணை தெல்லங்குளம் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன. வேலணை கிராம அபிவிருத்திச்சபை இந்நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது.

# கிருஷ்ணகிரியில் சி. எஸ். போட்டி

## தி. மு. க. ஆதரிக்கும்

சென்னை, ஜூலை 1
மத்திய அரசின் திட்ட அமைச்சர் திரு சி சுப்பிரமணியம் தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி தொகுதியில் போட்டியிடுவார்.

இப்பொழுது திரு சுப்பிரமணியம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகவில்லாதிருந்தும் இந்திரா மந்திரி சபையில் அமைச்சராக இருந்துவருகிறார். இரு சபைகளிலும் அங்கத்தவராக இருக்காத ஒருவர் அமைச்சராக்கப்பட்டால் அவர் ஆறு மாதத்துக்குள் இரு சபைகளில் ஏதாவதொன்றில் அங்கத்தவராகவேண்டும்.

இதன்படியே அவர் லோகசபைக்கு கிருஷ்ணகிரியில் போட்டியிடுகிறார். இவர் இத்தொகுதியில் போட்டியிடுவதற்கு வசதியாக இத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திரா காங்கிரஸைச்சேர்ந்த தீர்த்தகிரி கவுண்டர் தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்கிறார்.

திரு. சுப்பிரமணியத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்குமென தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி தெரிவித்தார்.

# வள்ளத்தில் வைத்து துடுப்பால் தாக்கினராம்

## கொலை வழக்கில் சாட்சியம்

ஊரதீவு, வியாழன்
"இறந்தவரும் நானும் வள்ளத்தில் இருந்தபோது அங்குவந்த எதிரி படகுத் துடுப்பால் எம்மைத் தாக்கினார். அடிவிழுந்ததும் இறந்தவரான எனது மாமனார் வள்ளத்துள் விழுந்துவிட்டார். எதிரி தண்ணீருக்குள் நின்றார். எதிரியின் அடியால் எனக்கு இடதுகாலில் நோவு ஏற்பட்டது. இறந்தவர் முகங்குப்புறவிழுந்ததும் எதிரிக்கு இரண்டுதரம் அடித்தேன். இறந்தவருக்கு எதிரி மீண்டும் அடிக்கவே மூன்றாவது தரமும் எதிரிக்கு அடித்தேன். பின்னர் "ஐயோ, மாமாவுக்கு அடிக்கிறார்கள்" என்று நான் கூக்குரலிட்டதும், இறந்தவரின் தமையனார் ஓடிவந்தார். தமையனார் வந்ததும் எதிரி கைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். பின்னர் என்னைப் பொலிசுக்குப் போகும்படி இறந்தவரின் தமையனாரான கள்ளுக்கொட்டில்காரர் சொன்னார். நானும் அதன்படியே செய்தேன். இறந்தவர் தம்பாட்டிக்கிராமத்துக்கு அடிக்கடிவருபவர் கூலிவேலை செய்தே பிழைப்பவர்"

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கொலின்டி மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட கொலை வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த சோமு என்பவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ்வழக்கில் ஆசீர்வாதம் என்பவரைக் கொலைசெய்ததாக குட்டியன் குமாரவேலு என்பவர் மீது ஊர்காவற்றுறைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. எதிரி சார்பில் அட்வகேட் அரசவால்டன், புறக்டர் மரியாம்பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜராகிவாதாடினார்.

வழக்கறிஞர் என் ரி சிவஞானம் ஊர்காவற்றுறைப் பொலிசாரின் உதவியுடன் வழக்கை நடத்தினார். மேல் விசாரணை அடுத்த மாதம் 5ந் திகதி நடைபெறும்.

யு. எஸ். இரகசியங்கள்

# தொடர் கட்டுரை வெளியிட பத்திரிகைகளுக்கு அனுமதி

## சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

நியுயோர்க் ஜூலை 1
"பென்டகன்" தஸ்தாவேஜுகள் பற்றிய கட்டுரைகளைதொடர்ந்து வெளியிடலாமென அமெரிக்க சுப்ரீம்கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

வியட்னாம் போரில் அமெரிக்காவின் ஈடுபாடு பற்றிய தஸ்தாவேஜுகள் பற்றிய இரகசிய கட்டுரைகள் நியூயோர்க்டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட் ஆகிய அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிட்டு வந்ததும் அதனை அமெரிக்க அரசாங்கம் எதிர்த்து வழக்குத் தொடர்ந்ததும் தெரிந்ததே.

இவ்வழக்கை விசாரித்த அமெரிக்க சுப்ரீம்கோர்ட் நீதியரசர்கள் 9 பேரில் 6 நீதியரசர்கள் கட்டுரைகள் வெளியிடலாமென்றும் 3 நீதியரசர்கள் இதற்கு எதிராகவும் தீர்ப்பளித்தனர்.

கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடக்கூடாதென பதற்கான குற்றச்சாட்டுக்களை ஆணித்தரமாக நிலைநாட்ட அரசாங்கம் தவறிவிட்டதென்று சுப்ரீம் கோர்ட் தனது தீர்ப்பில் கூறியது.

'போஸ்டன் குளோப்' என்ற இன்னொரு பத்திரிகைக்கு எதிராக மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இன்னொரு வழக்கிலும் இதே விஷயமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# “எல்லோரும் ஒரு குலம், என்ற கிறிஸ்துவின் போதனையைப் பின்பற்றுவோம்”

## பாராட்டுவிழாவில் புதிய பிஷப்

அராலி, வியாழன்

'வயதில் இளமையான ஒருவர் ஓர் ஆதீனத்தின் அத்தியட்சராக தெரிவு செய்யப்படுதல் அவர் தனது வாழ்நாட்களில் ஆற்றிய சேவையை கணித்தல்ல. அவர் இனிமேல் ஆற்ற வேண்டிய புதிய பொறுப்புள்ள வேலைத்திட்டங்களை செயல்படுத்தக் கூடியவரா என்பதை கருத்திற் கொண்டே நியமனம் பெறுகிறார்', இவ்வாறு தமக்களிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் பாராட்டுரைகளுக்கு பதிலளித்துப்பேசுகையில் வண பிஷப் டி. ஜே. அம்பலவாணர் கூறினார்.

யாழ் கிறித்தவ ஆதீன பிஷப்பாக நியமிக்கப்பட்ட தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

பாராட்டுவிழா நேற்றைய தினம் மாலை 5-00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி மண்டபத்தில் வண கே எல் ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்றது. விழாவில் தென்னிந்திய கிறீஸ்தவ திருச்சபை தலைவர் அதிவண பி. சாலமன். காரியதரிசி திருமதி டேஸ்ஸி எல் கோபாலரத்தினம், இந்திய அரசாங்க உப-தூதர் திரு ஏ ஆர். டேயோ. யாழ் நகர் பிஷப் வண டாக்டர் எமிலி, யானுஸ்பிள்ளை, கொழும்பு ஆதீன அத்தியட்சகர் வண ஒஸ்வால்ட்கோமிஸ், மெதடிஸ்ட் சேர்ச் பிரதிநிதி திரு. ஆர் ஈ ஜே ஏ சேதுகாவலர், குருநாகல் நகர் பிஷப் வண லக்ஸ்மன் விக்கிரமசிங்கி, யாழ் கல்லூரி சபைத் தலைவர் கலாநிதி டபிள்யூ. எல் ஜெயசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுரைகள் வழங்கினர்கள்.

தென்னிந்தியாவிலிருந்து வந்து விழாவில் பங்கு பற்றிய விருந்தினர்களை விழாத் தலைவர் வண ஜெயசிங்கம் வரவேற்றுப் பேசுகையில் 'இலங்கையிலுள்ள ஆதீனங்கள் ஒன்றிணைந்து 'லங்கா திருச்சபை' ஒன்றை விரைவில் நிறுவ விருப்பதால் நாம் தென்னிந்திய தொடர்பை இழக்க நேரிடுமென்ற கவலை நமக்கிருப்பினும். ஆசார தொடர்பு நிலையானது பிரிக்கமுடியாதது', என்றார்.

அவர் மேலும் கூறுகையில் "கடந்த ஜூன் மாதம் முற்பகுதியில் தமது 60ம் பிறந்த தினத்தைக் கொண்டாடிய தென் இந்திய திருச்சபை அதிபர் அதி வண பி. சாலமன் தமது விடாமுயற்சியாலும் மக்கள் சேவைக்கென பிரயாணவசதியற்ற கிராமங்களுக்கு குதிரை, கோவேறு கழுதை முதுகுகளிலும் பிரயாணஞ் செய்து ஆற்றிய பணிகள் அவரை இன்று இந்த உன்னத பதவிக்கு உயர்த்தியுள்ளது'என்றார்.

திருமதி கோபாலரத்தினம் பேசுகையில், 'மகாகவி பாரதிகண்ட பாரதம் மிக விரைவில் உருவாகும்' என்றார். இதே கருத்தை மனதில் வைத்து. புதிதாக அபிஷேகம் பெற்ற பிஷப் வண டி ஜே அம்பலவாணரும், 'கிறீஸ்து செய்த போதனைகளின், நாம் சேவைசெய்ய வேண்டியது கிறீஸ்த சமூகத்திற்கு மாத்திரமல்ல; மக்கள் எல்லோருக்கும், சாதி. மத பேதமின்றி, ஆஸ்திக நாஸ்திக வேறுபாடின்றி 'எல்லோரும் ஒரு குலம்' என்பதைக் கருத்திற்கொண்டியங்க வேண்டும்' என்றார்.

கலாநிதி டபிள்யூ. எல். ஜெயசிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"இளஞ் சந்ததியினர் பொறுப்பான பதவிகளுக்கு தெரிவுசெய்யப்படுவது. அவர்களிடம் காணப்படும் நேர்மை, துணிபு, எதிர்கால நோக்கங்கள் என்பனவற்றிற்கேயாம்.

இந்த விழாவில் வாழ்த்துரை கூறியவர்கள் எல்லோரும் ஆங்கிலத்தில் பேசினார்கள். நான் ஏன் தமிழில் பேசுகிறேன் என்பது வினாக்குறியை எழுப்பலாம். நான் தமிழில் பேசுவதற்கு இரண்டு காரணங்களுண்டு ஒன்று நான் தமிழில் பேச வேண்டுமெனப் பணிக்கப்பட்டேன், இரண்டாவது எனது வாழ்த்துரைகளுக்கு இலக்காகவும் விழாவின் நடுநாயகமாகவும் எம்மத்தியிலிருக்கும் தம்பதிகள் பரம்பரைத் தமிழர். ஒருவர் அம்பலவாணர், அவரின் வாழ்க்கைத் துணைவி திருமதி (டாக்டர்) கணபதிப்பிள்ளை. எனவே எனது வாழ்த்துரைகள் அவர்களின் தாய்மொழியிலமைவதே சாலச் சிறந்தது. மொழி வேறுபாடு காரணமாக எனது பேச்சைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்."

## புலோலியில் விஞ்ஞானப் பொருட்காட்சி

வல்வெட்டித்துறை, வியா.

இம்மாதம் 12, 13ந் திகதிகளில் நடமாடும் விஞ்ஞான பொருட்காட்சி புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலைக்கு வரவிருக்கிறது வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து ஆரம்பிக்கப்பட்ட இக்காட்சியைப் பருத்தித்துறைப் பகுதி மாணவர்களின் நலனை முன்னிட்டே இப்பாடசாலையில் இதனை வைக்க ஒழுங்குசெய்துவருகின்றனர்.

—

## அம்புலன்ஸ் இல்லாது மக்கள் அவஸ்தை

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் நிரந்தரச் சேவையிலிருந்த அம்புலன்ஸ் வண்டி பல மாதங்களாகப் பழுதடைந்து இருப்பதால் இப்பகுதி மக்கள் கடும் நோயாளரை 90 மைல்களுக்கப்பால் உள்ள யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்வதில் பெரும் கஷ்டமடைகின்றனர். தனிப்பட்ட காரோ அல்லது வாடகைக் காரோ நேரத்துக்குக் கிடையாத காரணத்தால் எத்தனையோ நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றப் பெருத்த அவஸ்தைக்குள்ளாகியுள்ளனராம்.

மேலும் முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரி, கரைதுறைப்பற்று. வவுனியா வடக்குப் பிரிவுக் காரியாதிகாரிகள் பிரிவைச் சேர்ந்த ஏறக்குறைய 30 ஆயிரம் மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு மாவட்ட ஆஸ்பத்திரியாகும். இந்த ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டி ஒன்று இப்போது இல்லாதது பொதுமக்களுக்குப் பெருத்த கஷ்டத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இது சம்பந்தமாகப் பல தடவைகள் புகார்செய்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லையாம்.

## அபிஷேகசடங்குகளை தெ. இ. திருச்சபைத் தலைவர் நடத்தினார்

அராலி, புதன்

இன்று காலை வண. டி. ஜே. அம்பலவாணர் வட்டுக்கோட்டை கிறீஸ்தவதேவாலயத்தில் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனகர்த்தாவாக நியமிக்கப்பட்டார். இவரின் நியமனப்பத்திரம் தென்னிந்தியாவிலிருந்து இன்றுகாலை விமானமூலம் வந்த தென்னிந்திய திருச்சபை செயலாளர் திருமதி டி. கோபாலரத்தினத்தினால் வாசிக்கப்பட்டது. மதச்சடங்குகளை பிரதமகுருவாக நடத்தியவர் தென்னிந்திய திருச்சபைத் தலைவர் அதி வண. பி. சாலமன்.

வண. அம்பலவாணர், தென்னிந்தியாவிலிருந்து இவ்விழாவை வைத்திற்கென இன்று காலை விமான மூலம் வந்திறங்கிய அதி. வண. பி. சாலமன், கேரள ஆதீனகர்த்தா வண. எம். எம். ஜோன். கன்னியாகுமரி ஆதீனகர்த்தா வண. ஐ. ஆர். ஏச். ஞானதாசன் இலங்கைத் திருச்சபையின் குருநாகல் ஆதீனகர்த்தா வண லக்ஸ்மன் விக்கிரமசிங்கி, யாழ்ப்பாண ஆதீன முன்னாள் அத்தியட்சகர் வண. சபாபதி குலேந்திரன் ஆகியோரால் சிரசின்மேல் கைவைத்து ஆசீர்வதிக்கப்பட்டார்.

மற்றும் மதச்சடங்குகளுடன் இந்தவிழா வண. டி. ஜே. அம்பலவாணருக்குஒரு மணச்சடங்குபோல் நடைபெற்றது. மக்கள் பலபாகங்களிலிருந்து திரளாகக் கூடியிருந்தனர்,

—

## யாழ். மேயருக்கு வாலிபர் சங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

"வாலிபர்கள் தங்கள் நேரத்தை வீணாக்காமல் பயன்தரக்கூடிய வழியில் செலவிடவேண்டும். அது அவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும்" என்று யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பேசும்போது கூறினார்.

வாலிபர் சங்கத்தின் அபிவிருத்தி வேலைகளுக்காக மாநகரசபை இச்சங்கத்திற்கு நிதியுதவி அளிக்கும். விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கவும், பாலர் வகுப்பு நடாத்தவும் சபை உதவியளிக்கும் என்று திரு துரையப்பா கூறினார்


# டெற்றோல் கிருமிகளைக் கொன்று உங்கள் குடும்பத்தைப் பாதுகாக்கிறது



ஆபத்தான கிருமிகள், உங்கள் சுற்றுப் புறங்களில் சூழ்ந்திருக்கின்றன. இந்தக் கிருமிகள், உங்கள் உடம்பில் பல வழிகளிலும் நுழைந்து, நோயும், நோய்த் தொற்றும் ஏற்படுத்த முடியும். அக் கிருமிகளிலிருந்தும் பாதுகாப்புப் பெற டெற்றோல் பாவியுங்கள்.



வெட்டுகள், சிராய்ப்புகள், புண்கள், பூச்சிக் கடிகளுக்கு டெற்றோல் பாவியுங்கள். அது கிருமிகளைக் கொன்று சீழ் பிடிப்பதைத் தடுக்கிறது. பிளாஸ்திரி மட்டுமே இடுவதால் ஆபத்தான கிருமிகள் உள்ளே அடைபட்டுச் சீழ்ப்பிடிப்பை உண்டாக்குவன.



டெற்றோலை, குளிக்கும் தண்ணீரிற் சேருங்கள். குளியற் தொட்டியிற் சேர்த்த டெற்றோல், உங்கள் குடும்பத்தை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கும்.



டெற்றோல், மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கு அதி உகந்தது.




டெற்றோல், தேகத்துக்கேற்ற தொற்று நாசினியெனினும் நோய் நிலவும் வேளைகளில் நோயாளிகளின் துணிகளையும் கழி கூடங்கள், தரைகளையும் நோய்த் தொற்றறச் செய்யவும் அதைப் பாவிக்கலாம். நோய்த் தொற்று பரவுவதை அது தடுத்துவிடும்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

உலகமெங்குமுள்ள டாக்டர்களும் ஆஸ்பத்திரிகளும் பாவிப்பது டெற்றோல். ஏனெனில் அது சக்தி வாய்ந்த நம்பகமான தொற்று நாசினி என்பதை அவர்கள் அனுபவத்தில் அறிவார்கள்.

P 0126

காங்கிரஸ் எம். பி. க்கள் பிரச்னை

# முடிவெடுக்க 8-ம் திகதி கொழும்பில் கூட்டம்

கொழும்பு, வியாழன்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வாலிப முன்னணியும் கொழும்புக் கிளையும் கொழும்பில் கூடி பிரச்னையைத் தீர்க்கவிருக்கிறது.

தமிழ்க்காங்கிரஸ் எம். பி க்கள் அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டது தொடர்பாக கொழும்புக் கிளை பலத்த எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றவேண்டுமெனவும் கொழும்புக்கிளை வற்புறுத்தி வந்துள்ளது.

திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் இம்மாதம் 8-ம் திகதிகூடி இப்பிரச்னை சம்பந்தமாக ஒரு முடிவு எடுக்கவுள்ளது.

உதைபந்தாட்டசுற்றுப்போட்டி:

# 'யாழ்டன்' சாம்பியன்

புத்தூர், வியாழன்

புத்தூர் சனசமூக நிலையம், வீனஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் கவிஞர் மு. செல்லையாவின் ஞாபகார்த்த 8-வது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் புத்தூர் வீனஸ் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஆவரங்கால் யாழ்டன் விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் சர்வோதயா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் யாழ்டன் விளையாட்டுக் கழகம் 5—0 கோல்களால் சர்வோதயா விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. 'யாழ்டன்' கோல்காப்பு வீரர் திரு. சி. யோகநாதன் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்.

இம்முறை 8-வது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின், சுற்றுக்கேடயத்தை 'யாழ்டன்' விளையாட்டுக் கழகம் பெற்று இவ்வருட சாம்பியனாகியது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. கே. மார்க்கண்டு கடமையாற்றினார்.

பிரதம விருந்தினராக கோப்பாய் பொலிஸ் நிலைய அதிபர் திரு வி. கிருஷ்ணசாமி கலந்துகொண்டு பரிசில் வழங்கினார்.

அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயம்

# தனிக்கட்டிடத்தில் இயங்க கல்வி அமைச்சு அனுமதி

அப்புத்தளை, வியாழன்

அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம் விரைவில் தனித்தமிழ் பாடசாலையாக புதிய கட்டிடத்தில் இயங்கப் போகிறது. இதற்கான அனுமதியை பண்டாரவளைக் கல்வி அதிகாரி வழங்கியுள்ளது.

இதுவரைகாலமும் அப்புத்தளை மகா வித்தியாலயம் சிங்கள மகா வித்தியாலயத்துடன் சேர்ந்து இயங்கி வந்தது. சுமார் 800 தமிழ் மாணவர்கள் கல்வி கற்கும் இப் பாடசாலையில் தமிழ் மாணவர் கல்வி கற்பதற்கு இடவசதியில்லாதிருந்ததால் இதுவரை மாலைவேளைகளில் சிங்களமகா வித்தியாலய கட்டிடத்தில் தமிழ் பாடசாலை இயங்கி வந்தது. அதனால் மாணவர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருந்தனர்.

அதிபர் திரு என். தேவதாசன் பெற்றார் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டுவித்து தங்கள் குறைபாடுகளை அப்புத்தளை ஆட்சிமன்ற உறுப்பினரும் சுகாதார அமைச்சருமான திரு ஆரியதாசவுக்கும் கல்வி மந்திரிக்கும் பிரதேச கல்வி அதிகாரிக்கும் தமிழ் மாணவர் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி எடுத்துரைத்தனர்.

அப்புத்தளை நகரமத்தியில் தமிழ் வித்தியாலயத்துக்கென கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான அனுமதியை கல்வி அமைச்சு இப்போது வழங்கியுள்ளது. அதற்கான காணியை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.


"யங் ஹார்ட்ஸ்"
விளையாட்டுக் கழகம்
களிப்பூட்டும்
'ரொம்பொல'
இன்டோர் விளையாட்டு
நாளை 3—7—71
இரவு 6 மணிக்கு
முதல் விளையாட்டு
ஆரம்பமாகும்
மாலை 6-30 க்கு
ரூபாய் 100-00 க்கு
'ஸ்னோ போல் கேம்'
லொத்தர் மூலம்
தெரிவு செய்யப்படும்
புதிய அங்கத்தவர்கள்
சேர்க்கப்படுகின்றனர்.
பல்மேரு
கொற்றேஜ்
85, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்

YOUNG HEARTS
SPORTS CLUB
Introducing
The Most Fascinating
Indoor Game
TOMBOLA
Tomorrw
3—7—71
Ist GAME
At 6 P. M.
A SNOW BALL GAME
For Rs 100/-
Will be Chosen by
LOTTERY
At 6-30 P. M.
PALMYRA COTTAGE
85, Main Street,
Jaffna
Register open for
new members


வணிகமாணவர் பிரச்னை தீர்ந்தது!

# "பற்று-வரவு" பதங்களே சரியென அமைச்சு அறிவிப்பு

... நமது நிருபர் கே ஜெயக்குமார் ...

உடுப்பிட்டி, வியாழன்

நீண்டகாலமாகப் பரீட்சைப்பகுதியினரையும், அரசகரும மொழித்திணைக்களத்தினரையும், வணிகத்துறை அறிஞர்களையும் பிரச்னைக்குள்ளாக்கித் தலையிடியைக் கொடுத்துவந்த பற்று—வரவா, வரவு—செலவா சரியென்ற வாதப் பிரதிவாதங்களுக்கு கல்வி அமைச்சு முற்றுப் புள்ளி வைத்துவிட்டது.

கணக்கியலில் டெபிற், கிரெடிற் என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் பதங்களுக்குத்தமிழில் ஒருசாரார் 'டெபிற்' என்பதைப் பற்று என்றும், 'கிரெடிற்' என்பதை வரவு என்றும் வேறு சிலர் டெபிற்றை வரவு என்றும் கிரெடிற்றைச் செலவு என்றும் கையாண்டு வந்தனர். அரசகருமமொழித் திணைக்களம் சில வருடங்களுக்கு முன்னர் வெளியிட்ட வணிகவியல் கலைச்சொல் பற்றிய அறிக்கையொன்றில் பற்று-வரவு முறையே சரியானதெனக் குறிப்பிட்டிருந்தது.

ஆனால் பரீட்சைப்பகுதி கணக்கியல் வினாக்களில் வரவு-செலவு என்ற பதங்களையே பிரயோகித்து வந்தது. முன்னர் கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரியாக இருந்த கொக்குவில் பல்கலைத் தொழில்நுட்பக் கழகத்திலும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பற்று-வரவு என்ற பதங்களே கணக்கியலில் போதிக்கப்பட்டு வருகின்றது.

இக்குளறுபடியினால் கணக்கியல்மாணவர்கள் பரீட்சைகளின்போது எதிர்பாராத அதிர்ச்சிகளுக்குள்ளாகியதோடு பரீட்சைகளில் சித்தியடைவதும் குறைவாக இருந்து வந்ததாம். இதனைத் தொடர்ந்து கணக்காளர்களும், வணிகப்பேராசிரியர்களும் தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்திருந்தனர்.

கொக்குவில் பொலி டெக்னிக் வணிக மாணவர் மன்றத்திலும் இவ்விடயமாகக் கல்வி இலாகாவுடனும் அரசகரும மொழித்திணைக்களத்துடனும்தொடர்புகொண்டு வந்தனர். தற்போது கல்வி அமைச்சு எடுத்துள்ளஇறுதி முடிவில் 'பற்று-வரவு' என்னும் பதங்களே சரியானது என்று அறிவித்துள்ளது.

## வழக்கு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை வியாழன்

கெருடாவிலைச் சேர்ந்த பொ. கதிரமலை என்பவர் அதே ஊரைச் சேர்ந்த குமாரசுவாமிக் குருக்கள் தங்கப் பாக்கியம் என்பவருக்குச் சொந்தமான 2,888 ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அபகரித்ததாகக் குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது. எதிரி கதிரமலை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

வல்வெட்டித்துறைப் பொலிசார் என்னைக் கைது செய்த அன்றிரவு பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தாக்கினர். இது சம்பந்தமாக பிரதம மந்திரிக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் முறையிட்டு இருந்தேன். நான் வழக்காளியின் தாலிக்கொடியை அறுக்கவும் இல்லை, அவரை காயப்படுத்தவும் இல்லை. என்மீதுள்ள கோபத்தினால் இப்படி பொய்முறைப்பாட்டைச் செய்துள்ளனர். சம்பவதினத்தன்று நான் எழுதுமட்டுவாளில் விவசாயம் செய்து கொண்டிருந்தேன். பன்னிரண்டு தினங்களின் பின் ஒருநாள் வல்வெட்டித்துறைப் பொலிசார் களவு ஒன்று சம்பந்தமாக என்னைத் தேடிவருவதாக எனது தகப்பனார் என்னிடம் சொன்னார். அதன்பின் நான் காங்கேசன்துறை ஏ. எஸ். பி கந்தோரில் போய்ச் சரண் அடைந்தேன். அவர்கள் என்னை வல்வெட்டித்துறைப் பொலிசுக்கு அனுப்பி வைத்தனர்' என்றார்.

சப்-இன்ஸ்பெக்டர் திரு குணவர்த்தனா, சார்ஜன்ட் திரு. பெரேரா, பொலிஸ் கான்ஸ்டபிள் ஆனந்த டி சில்வா ஆகியோர் சாட்சியமளித்தபின் மேல்விசாரணை அடுத்தமாதம் 13ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வேலணையில் கரபந்தாட்ட நிலையம்

வேலணை, வியாழன்

'தோல்வியையும் வெற்றியையும் சமமாக மதிக்கும் பண்பினை வளர்க்க விளையாட்டுத்துறை வளர்ச்சியடைய வேண்டும். தாச்சிப் போட்டியில் இப்பகுதி இளைஞர்கள் சட்டிய வெற்றியினால் இத்தொகுதியில் அவர்கள் திறமை நிலைநாட்டப்பட்டுள்ளது. அவ்வாறே கைப்பந்தாட்டத்திலும் பயிற்சி பெறுவதால் மேலும் பிரபல்யமடைய வாய்ப்புண்டு என வேலணை கிழக்கு செட்டிபுலம் சனசமூக நிலையத்தினர் கரபந்தாட்ட விளையாட்டு மைதானத் திறப்பு விழாவின்போது கொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசிய வேலணை சனசமூகநிலையங்களின் சமாஜத் தலைவர் திரு. சி. இராசரத்தினம் கூறினார்.

வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவம் பந்தை அடித்து விளையாட்டை ஆரம்பித்து வைத்தார். விளையாட்டுப் போதனாசிரிய திரு. பொன்னுச்சாமி அரசாங்கத்தால் நன்கொடையளிக்கப்பட்ட வலையையும் பந்தையும் வழங்கி வீரர்களைப் பாராட்டிப் பேசினார்.

# பொதுவாழ்வு வாழ்ந்த பெரியார் நாகலிங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சைவத்துக்கும் தமிழுக்கும் அரிய சேவையாற்றிய அதே சமயத்தில் காந்தியக் கொள்கைகளை தன்னாலியன்றளவு பரப்பி, அதற்கேற்ப வாழ்ந்த பெரியார் திரு. இ. நாகலிங்கம் அவர்கள். செந்தமிழும் ஆங்கிலமும் சென்னையில் கற்று, பாண்டித்தியம் பெற்று, பொதுவாழ்வு வாழ்ந்தவர் அவர். நெசவு, கதரிடுதல் போன்றவற்றை முன்னின்று செய்து குறிப்பாகத்தான் பிறந்த காரை நகருக்கு பெருந்தொண்டாற்றினார்"

இவ்வாறு காரைநகர்வியாவில் சைவ பரிபாலன வித்தியாசாலை முன்னாள் முகாமையாளர் திரு. இ. நாகலிங்கத்தின் உருவப் படத் திரைநீக்க விழாவின்போது பண்டிதர் சு. இராமசாமி மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் வட்டுக்கோட்டை கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் தலைமையில் இவ்விழா நடந்தது.

மகாத்மா காந்தியடிகளின் சுதேசிய இயக்கத்தில்நெருங்கிய ஈடுபாடு கொண்டு உழைத்த மறைந்த பெரியார் நாகலிங்கம் காரைநகர் உடையார் இராமலிங்கத்தின் புதல்வர், நீண்டகாலம் பிரமச்சாரியாக வாழ்ந்து பொதுவாழ்க்கைக்கு தன்னை அர்ப்பணித்தார். காரைநகரில் முதல் தடவையாக பொதுவாசிகசாலை ஒன்றை ஆரம்பித்து அப்பகுதிமக்களுக்கு வாசனை ரசனையை ஏற்படுத்தியபெருமையும் இவரைச் சாரும். இந்த வாசிகசாலை சைவ மகாசபையாக உருப்பெற்றது. சைவசமய கலாச்சார இயக்கங்களில் இவர் ஆரம்பித்த மகாசபை ஈடுபட்டு பணியாற்றியது.

மகாத்மாகாந்தி, ஜவர்ஹர்லால்நேரு போன்ற பெரும் தலைவர்கள் காரைநகருக்கு விஜயம்செய்வதற்கு காரணமாக இருந்தவரும் இவரே.

காரைநகரில் பாடசாலை ஒன்று இல்லாத குறையைப் போக்க வியாவில் சைவ பரிபாலன வித்தியாசாலை ஒன்றை ஆரம்பித்தார். இதன் முகாமையாளராகவும் இருந்து பணியாற்றினார்.

பலவிதமானபொது இயக்கங்களில் தன்னை ஈடுபடுத்தி பொதுவாழ்வு வாழ்ந்த இப்பெரியாரை, உண்மையான மக்கள் தொண்டனை குறிப்பாக காரைநகர் மக்கள் மறந்துவிடமாட்டார்கள்

ஆனர் உருவப்படத்திரை நீக்க விழாவில் இவருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தியவர்கள் இவரின் சேவைகளை நினைவுகூர்ந்தார்கள்.

முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. சபாபதி, சைவமகாசபை செயலாளர் திரு ஆ. சிவபாதம் ஆகியோர் உட்பட பலர் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

தரையப்பாவின் காரை குண்டினால் சேதப்படுத்தியது சம்பந்தமான வழக்கு யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்திரேட் திரு எஸ் கனகரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பதில் மாஜிஸ்திரேட் இம்மாதம் 9ம் தேதிவரை வழக்கை ஒத்திவைத்தார்.

இச் சம்பவம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும், சந்தேக நபர்கள் இருவரும் நேற்று ஆஜர் செய்யப்படவில்லை.

## அனுதாபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ரஷ்யா விண்வெளி வீரர்கள் மரணமடைந்ததையிட்டு அதிர்ச்சியடைந்ததாகவும். அவர்களின் மரணத்தையிட்டுசோவியத் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும், விண்வெளி வீரர்களின் குடும்பத்துக்கும் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் லங்கா சோவியத் நட்புறவுச்சங்க தலைவர் திரு வி தர்மலிங்கம், சோவியத் ஸ்தாபனங்களுக்கு அனுப்பியுள்ள தந்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

**மணிவாக்கு**

பணம் நமக்குப் பெற்றுத் தருவதெல்லாம் சோறும் சுறியுமேயாகும். பணத்தையே உன்னுடைய உயிரும் உடலுமெனவோ உனது ஒரே குறியும் நோக்கமு மெனவோ கருதாதே.
—பரமஹம்ஸர்

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண வருஷம் ஆனிமாதம் 18 - திகதி (2-7-71)

## கூட்டுறவு மூலம் சிறிய கைத்தொழில்கள்

யாழ். மாநகர ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவு சமாஜத்தைத்தொடக்கி வைத்து உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்கவிருக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தைச் சரியாக எடுத்துக்காட்டியது பொருத்தமும் அர்த்தமும் பொதிந்ததாகும்.

கடந்த பதினைந்து ஆண்டு காலத்தில் ஆட்சி பீடத்திலிருந்த அரசாங்கங்கள் பெரிய திட்டங்களினால் அரசாங்கத்துறையின்மூலம் கைத்தொழில் விருத்திக்கு எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததன் விளைவாக அந்த அனுபவத்தின் அடிப்படையில்தான் இத்தீர்மானத்தை அரசு மேற்கொண்டிருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டவேண்டிய அவசியமில்லை,

பெரிய அளவில் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் நடத்துவதற்கும் பெருந்தொகைப் பணம் மூலதனமாகவேண்டும். இதில்பாதி அந்நிய செலாவணியாகத் தேவை, இத்தொகை வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்பட்டுத்தானாகவேண்டும். இது மட்டுமல்ல பெரிய அளவிலான கைத்தொழில்கள் மூலம் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதும்சாத்தியமல்ல. இது நாம் அனுபவபூர்வமாகக் கண்டறிந்த உண்மையுமாகும்.

எனவே இதற்குப் புதிய வழி காணப்பட வேண்டியது அவசியம். கிராம சமுதாயத்தின் கூட்டுமுயற்சி மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை விருத்திசெய்வதே நடைமுறைச் சாத்தியமான வழியாகும், பெரிய நகரங்களிலும் அவற்றைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் ஒரு சில பெரிய கைத்தொழில்களை நிறுவுவதால் எங்கள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாதென்பதை நினைவில் கொள்ளவேண்டும். நகரப் பகுதிகளில் பெரிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதனால் குடிஜன நெருக்கம் ஏற்படவும் சேரிப் பிரச்சினைகள் தோன்றவும் குற்றச்செயல்கள் பெருகவுமே உதவும்.

கூட்டுறவுக் கைத்தொழில்களும் கூட்டுறவுப் பண்ணைகளும் கிராமப்புறங்களில் ஆரம்பிக்கப்படவேண்டும். அதிக இலாபம் தேடுவதையே நோக்கமாகக் கொண்ட தனியார் துறையை மட்டும் நம்பியிருக்கமுடியாது. கிராமப் பொருளாதாரத்துக்கு சோஷலிஸ நோக்கில் புத்துயிரூட்டுவதற்கு முயற்சியும் ஊக்கமும் அளிப்பதற்குத் தனியார் துறையினர் தயாராகுவர்களாக்கும் ஓர் இடமில்லசமயில்லை.

கூட்டுறவுக் கைத்தொழில் திட்டம் சரியான முறையில் செயல்படுவதும் வெற்றியளிப்பதும் அரசாங்க இலாகாக்கள் நடத்துகொள்வதில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது. மாவட்ட அபிவிருத்திச் சபைகள் காரியாதிகாரிகள், அரசாங்க அதிபர்களின் கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும்இயங்கவிருக்கின்றன. எந்தச் சபைகளின் நடவடிக்கைகள் முழுவதும் கிராம ரீதியில் செயற்படுவதற்கு ஒழுங்குபடுத்துவது இவர்களின்பணியாக இருக்கும்.

பாவனையாளர்களுக்குப் பொருள்களை விநியோகிக்கும் இப்போதுள்ள கூட்டுறவுச்சங்கக் கடைகளைப் பின்பற்றுமல் பொருள்களை உற்பத்திசெய்யும் கூட்டுறவுச் சங்கங்களாக உத்தேச கிராம சமுதாய கூட்டுறவுத்துறை செயல்படுவதற்கு கூட்டுறவு இலாகா முக்கிய பணியாற்றவேண்டும், கடன் வசதி அளிப்பதிலும் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிர்வாகத்தை மேற்பார்வைசெய்வதிலும் மக்கள் வங்கிக்கும் சமபங்கு உண்டு அந்தத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனைகள் அந்தந்தத்துறைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கவேண்டும்.

நல்ல ஆரம்பத்திலும் தொடர்பான முயற்சியிலும், காலவேகத்திலும் தான் இந்த முக்கியமான திட்டத்தின் தலைவிதியும் எதிர்காலமும் தங்கியிருக்கிறது பெரிய கொழுத்த சம்பளத்தில் நிர்வாக உத்தியோகத்தர்களை நியமிப்பது, தொழிலாளர்களை நிர்வகிப்பது. போன்றவற்றில் கடந்த காலத்தவறுகளை ஒருபடிப்பினையாகக்கொண்டு புதிய அமைப்பில் நீக்கவேண்டும், உள்பிரச்சினை பொருளாதார அபிவிருத்தியைப் பயனில்லாமல் செய்துவிடும்.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாக இயங்குவதற்கு வேலைவாய்ப்புத் திட்டத்தை துரிதமாகச் செயல்படுத்த முழுமையான கொள்கை வகுக்கப்படவேண்டும். பொருளாதாரம் நெருக்கடியாகவுள்ள இச்சமயத்தில், இந்தப் புதிய துறையில் நாம் தோல்வியடையவிட முடியாது.

யூகோஸ்லாவியா

### அரசியலில் புதிய திருத்தம்

பெல்கிரேட், ஜூலை 1

யூகோஸ்லாவிய அரசியலில் புதிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு கூட்டு அதிபர்கள் என்ற முறையில் அதிபர் பதவி இருக்குமாம். இத்திட்டத்தை யூகோஸ்லாவிய அதிபர் திரு. டிட்டோ முன்பு அறிவித்திருந்தார். யூகோஸ்லாவியா 6 தன்னிறைவு கொண்ட மாநிலங்களைக் கொண்டிருக்கும், மத்திய அரசுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் அளிக்கப்படும்

## வளர்ப்பது எழுத்தாளர் காப்பது அரசியல் வாதிகள்

### நூல்வெளியீட்டு விழாவில் எம். பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

"எமது தாய்மொழியாகிய தமிழை வளரச்செய்வது புலவர்கள், கவிஞர்கள். எழுத்தாளர்களுடைய கடமையாகும். தமிழ்மொழியை அழியாமல் பாதுகாப்பது அரசியல்வாதிகளின் கடமையாகும்."

எழுத்தாளர் பொ சண்முகநாதனின் 'பெண்ணே நீ பெரியவள்தான்' என்ற நகைச்சுவை நூல் வெளியீட்டுவிழாவில் உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பண நகரமண்டபத்தில் இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நடந்த இவ்விழாவில் கலையரசு சொர்ணலிங்கமும் கலந்துகொண்டார்.

உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் மேலும் கூறியதாவது: "பொ. சண்முகநாதனை நீண்ட நாட்களாக எனக்குத் தெரியும் ஆனால் அவர் ஓர் எழுத்தாளர் என்று எனக்குத் தெரியாது. சிறந்த முத்துக்கள் மனிதனுக்குத் தெரியாமல் சமுத்திரத்தின் அடியில் மறைந்திருப்பதுபோல் அவர் பலருக்குத் தெரியாமல், சிறந்த எழுத்தாளராக விளங்கிவந்தார்.

நூல் வெளியீட்டுவிழா நடத்துவது தமிழரின் மரபு. எதற்காக விழா என்று பலர் கேட்டார்கள். பண்டைய நாட்களிலும் இப்படியான விழாக்கள் நடந்திருக்கின்றன. கம்பன் தனது காவியத்தை மன்னர் அவையில் அரங்கேற்றினார். கவிஞர்கள், எழுத்தாளர்கள் பண்டைய நாட்களில் தங்கள் நூல்களை மன்னர் அவையில் அரங்கேற்றினார்கள். கலை, கலாச்சாரம், மொழி, பண்பைப் பேணிக் காப்பது மன்னரின் கடமையாக இருந்தது.

இன்று மன்னர் ஆட்சி மறைந்து மக்களாட்சி மலர்கின்றது ஆகலால் மக்கள் அவையில்தான் நூல்கள் வெளியிடப்படவேண்டும். மக்கள்தான் எழுத்தாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கவேண்டும். மக்கள் தான் இன்று கலை, கலாச்சாரம், மொழி, பண்பைப் பாதுகாக்கவேண்டும்.

நூலின் உள்ளவற்றை எடுத்துக் கூறுவதற்கு இவ்விழா பயன்படும். கடைகளில் நூல்களை வைப்பதால் அவற்றை விளம்பரப்படுத்தமுடியாது. இப்படியான விழாக்கள், நூல்களை விளம்பரப்படுத்த உதவியாக இருக்கும்.

மொழியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது என்பதை எல்லாரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மொழி கலை கலாசாரம், நெற்பயிரை வளர்ப்பதற்கு ஒப்பாக இருக்கிறது.

நிலத்தைப் பண்படுத்தி நெல்லை வளர்க்கவேண்டும். அதேபோல்தான் புலவர்கள், கவிஞர்கள் படைப்புகள் மூலம் மொழியை வளர்க்கவேண்டும். நெற்பயிரை அயலவரின் மாடுகள், எருமைகள் நாசமாக்காமல் பாதுகாப்பதுபோல் மொழியைப் பாதுகாக்க வேண்டியது அரசியல்வாதிகளின் கடமையாகும்."

தலைவர் திரு. கனக. செந்திநாதன் பேசும்போது நகைச்சுவை எழுத்தாளர்களுக்கு இந்நாட்டில் நல்ல எதிர்காலம் உண்டென்றும் நகைச்சுவை எழுத்தாளர்களை எவரும் கோபிக்கமாட்டார்கள் என்றும் கூறினார்.

"சுயா" நல்ல ஒரு நகைச்சுவை எழுத்தாளராக விளங்கிவந்தாரென்றும், "சாது" நகைச்சுவைக் கட்டுரைகளை நன்கு வெளியிட்டாரென்றும், அவர் மேலும் கூறினார். இன்று நூல்கள் வெளியிடுவதற்கு அதிகம் செலவாகிறதென்றும் நூலில் 1 பக்கத்திற்கு 10 ரூபா செலவாகிறதென்றும், 100 பக்க நூல் வெளியிட 1000 ரூபா செலவாகிறதென்றும் திரு. கனக செந்திநாதன் கூறினார்.

கனகலிங்கம் சுருட்டு தொழில் அதிபர் திரு. வே. க. இராசலிங்கம் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

திரு. ந சிவபாதம் வரவேற்புரை நிகழ்த்தினார், திரு க. குணராசா வெளியீட்டுரை நிகழ்த்தினார் கலையரசு சொர்ணலிங்கம், கவிஞர் வி கந்தவனம், திரு தேவன், திரு சி சரவணபவன். ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

---

### "உதாரணமாக வாழ்ந்து காட்டியவர்"

நுணாவில், வியா

கவிஞர் உருத்திரமூர்த்தி (மகாகவி)யின் அகால மறைவு ஈழத்திலக்கிய உலகிற்கு மாபெரும் இழப்பாகும். தனித்துவ நடையில் இனித்திடும் கவிதைகள் படைத்து ஈழத்து கவிதைத் துறையை வளப்படுத்திய மகாகவி இன்று எம்மிடையே இல்லையென்று நினைக்கும் போது ஏக்கம் மிகுகின்றது. கவிதை, கவிதை நாடகம், விளையாட்டு முதலிய பல துறைகளில் அவர்தம் கவி வண்ணத்தைக் காட்டிக் காலத்தை வென்றிருக்கின்றார். ஈழத்துப் பெரும் இலக்கிய முயற்சிகளில் தானும் பங்குகொண்டு முன்னின்று உழைத்திருக்கின்றார் பல இளம் கவிஞர்களை உருவாக்கிய பெருமையும் அவரைச் சாரும்

கவிஞர்கள் ஒழுக்கசிலர்களாக, உதாரண புருடர்களாக விளங்கவேண்டுமென்ற ஆரோக்கிய கொள்கைகேற்ப விரிந்த நோக்கத்துடனும் பரந்த மனப்பான்மையுடனும் வாழ்ந்து காட்டியபெருமை உருத்திரமூர்த்தியவர்களைச் சாரும்"

நுணாவில் தமிழ்மன்றம் கவிஞர் "மஹாகவி"யின் மறைவு குறித்துத் தெரிவித்துள்ள இரங்கற்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

---

மண்டைதீவு

### அணைக்கட்டை திருத்துக

குருநகர், வியா

"மண்டைதீவு தெற்கில் கடலோரமாக கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகள் பழுதடைந்தநிலையில் இருப்பதால் கடல் வெள்ளம் அதிகரிக்கும் நேரங்களிலும், மழை பெய்யும் காலங்களிலும் கடல்நீர் உட்செல்லக்கூடியதாக இருக்கின்றது. இதனால் இப்பகுதிகளிலுள்ள வயல் நிலங்கள் பாதிக்கப்படக் கூடிய ஆபத்தான நிலையிருக்கின்றது. எனவே இந்த அணைக்கட்டிலுள்ள பாலங்களையும், அணைக்கட்டின் உடைந்த பகுதிகளையும் திருத்தியமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என மண்டைதீவு தெற்குக் கிராம முன்னேற்றச்சங்கம் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் கிளைப் பொறியியலாளரையும், விவசாயவிஸ்தரிப்பு இலாகாவையும் கேட்டிருக்கின்றது.

## பொலிஸார் வெளியேற்றினர்

குருநகர், வியா

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைக்கு அண்மையில் யாழ்ப்பாண மாநகரசபையினரால் நிறுவப்பட்டுள்ள பாஷையூர் குடியேற்றத் திட்டத்தில் கட்டப்பட்டு வந்த வீடுகளில் அத்துமீறிக் குடியிருந்தவர்களைப் பொலிசார் அப்புறப்படுத்தியுள்ளனர்.

கட்டி முடிவுறாத நிலையில் இருந்த இவ் வீடுகளில் குடியிருத்துவதற்கு ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் தெரியப்பட்டவர்கள் அவ் வீடுகளுக்கு அனுப்பப்படுவதற்கு முன் அவ் வீடுகளில் சிலர் குடியிருக்கத் தொடங்கியதால் அவ்வீடுகளை விட்டு இவர்களை வெளியேற்றுவதற்குப் பொலிசாரின் உதவி மாநகரசபைக்கு வேண்டியிருந்தது! சட்டவிரோதமாக அவ்வீடுகளில் குடிபுகுந்தவர்களை அப்புறப்படுத்திய பொலிசார் இவர்கள் மீது வழக்குத்தொடரவிருப்பதாகவும் தெரிகிறது.

......

புத்தளம்

இடைத் தேர்தல்

### நியமன திகதி ஒத்திவைப்பு

சேட்டை, சியாழன்

புத்தளம் இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி ஜூலை 10 என அறிவிக்கப்பட்டிருந்தது, தற்பொழுது அத் திகதியில் நியமன பத்திரங்கள் தாக்கல் செய்யப்படமாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் இத் தேர்தல் தொகுதியில் அமுலில் இருப்பதால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகாதேசாதிபதி விடுத்துள்ளவிசேஷ வர்த்தமானி அறிவித்தலில் தெரிவித்துள்ளார் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் திகதி அறிவிக்கப்படவில்லை.

---

### பெருமாள் கோவில் கும்பாபிஷேக இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று காலை 9 மணிக்கு நவக்கிரகமகம், வாஸ்து சாந்தி, மாலை 5 மணிக்கு மிருத்து சங்கிரணம், யாக அங்குரார்ப்பணம், ஆசாரட்சாபந்தனம் முதலிய கிரியைகளும் பின்னிரவு 4 மணிக்கு தாபிஸ்தாபனம், ஸ்ரீவிநாயகர், ஸ்ரீ மகாலெட்சுமி, ஸ்ரீ ஆண்டாள் யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் ஆகியவையும் நடைபெறும், ......

கம்யூ. கட்சியின்

### 28-வது மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 28-வதுவருடாந்த மகாநாடு நாளை நடைபெறவுள்ளது. மகாநாட்டை யொட்டி யாழ்ப்பாணம், மாத்தறை, கொழும்பு, இரத்தினபுரி, கண்டி, பதுளை ஆகிய இடங்களில் கட்சியின் வரலாறுதற்போதைய அரசியல் நிலைமை என்பன பற்றி விசேஷ உரை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.